DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W.1 (L.W.1) |
| Name | : Christhudhas |
| Father Name | : Rajayan |
| Village | : Kattathurai |
| Taluk | : Kalkulam |
| Calling | : Mason |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2023

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் காட்டாதுறையில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 27.06.2020 ம் தேதி காலை 06.00 மணிக்கு நான் மஞ்சாடியில் உள்ள ஆர்சி சர்ச்சுக்கு சென்ற போது சர்ச்சின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்த போது உண்டியல் உடைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து சுமார் 20 ஆயிரம் பணம் திருடுபோயிருந்தது. யார் திருடினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. பின்னர் அந்த கோவிலின் பாதர் வெளியே சென்றிருந்ததால் நான் தக்கலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அது அசா.ஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

திருட்டு சம்பவமானது எப்போது நடைபெற்றது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து கமலம் என்பவர் தான் எனக்கு தகவல் சொன்னார். சுமார் 06.00 மணியிருக்கும். புகார் நான் 01.00 மணிக்கு கொடுக்க சென்றேன். நானும் சிபு, ஜோஸ் காவல்

நிலையம் சென்றோம். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகார் மனுவை ஜார்ஜ் ரைமன்ட் எழுதினார். போலீசார் புகார் கொடுத்தற்கு பின்பு விசாரிக்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும்எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 2 (L.W.2) |
| Name | : kamalam |
| Husband Name | : Devaraj |
| Village | : Kattathurai |
| Taluk | : Kalkulam |
| Calling | : Labour |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2023

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் காட்டாதுறையில் வசித்து வருகிறேன். மஞ்சாடியில் உள்ள கோவிலில் நான் ஆலய பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 26.06.2020 ம் தேதி சூசையப்பர் ஆலயத்தில் கோவில் கதவு பூட்டப்பட்டது. பின்னர் நான் மறுநாள் 27.06.2020 ம் தேதி காலை 06.00 மணிக்கு நான் பார்த்த போது கோவிலின் பூட்டி உடைந்திருந்தது. பின்னர் மேற்படி சம்பவத்தை நான் கிறிஸ்துதாஸ்., சிபு என்பவரிடம் சொன்னேன். பிறகு அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். யார் திருடினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

நான் சூசையப்பர் கோவிலில் பங்கு சார்ந்தவர். கோவிலில் கிறிஸ்துதாஸ், சிபு பொறுப்பில் இருந்தார்கள். நான் போன் மூலமாக அவர்களுக்கு தகவல் சொன்னேன். அவர்கள் 07.00 மணிக்கு வந்தார்கள். போலீசார் புகார் கொடுத்த தேதி அன்று தான் என்னை விசாரித்தார்கள். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும்எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும்
ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்

## DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 3 (L.W.3) |
| Name | : Shiburam |
| Father Name | : Arulappan |
| Village | : Kattathurai |
| Taluk | : Kalkulam |
| Calling | : Business |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2023

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் காட்டாதுறையில் வசித்து வருகிறேன். பெயின்ட் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 27.06.2020 ம் தேதி காலை 06.05 மணியளவில் கமலம் என்பவர் ஆலயத்தில் கதவு உடைக்கப்பட்டு உண்டியலில் பணம் திருடுபோயிருந்ததாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். அதன்பின் நான் ஆலயத்தில் சென்று பார்த்த போது கதவு உடைக்கப்பட்டிருந்தது. உண்டியலும் உடைக்கப்பட்டிருந்தது. பின்னர் சம்பவத்தை நான் பாதரிடம் சொன்னேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பின்னர் திருட்டு சம்பவம் குறித்து தக்கலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே 600 மீ தொலைவு இருக்கும். நான் காலை 06.05 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்திற்கு நானும் கிறிஸ்துதாஸ், கமலம் சென்றிருந்தோம். காவல் நிலையத்திற்கு நானும் கிறிஸ்துதாஸ், டென்சிங்

சென்றோம். புகார் பாதர் தான் லெட்டரில் கொடுத்தார். கோவிலில் யார் திருடினார்கள் என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும்எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 4 (L.W.4) |
| Name | : Densingh Jose |
| Father Name | : Yesudhas |
| Village | : Kattathurai |
| Taluk | : Kalkulam |
| Calling | : Business |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2023

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் காட்டாதுறையில் வசித்து வருகிறேன். நான் கார் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 27.06.2020 ம் தேதி பகம் 02.00 மணியளவில் சூசையப்பர் ஆலயத்தில் திருட்டு நடைபெற்றது சம்பந்தமாக தக்கலை காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். பார்வைமகஜரில் காண்பிக்கப்படும் முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வைமகஜர் அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். பார்வைமகஜரை தட்டச்சு செய்து கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடமான சர்ச் வளாகத்தில் வைத்து தான் கையொப்பம் போட்டேன். போலீசார் உங்களிடம் எழுதாக பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள் என்றும் வழக்கிற்காக சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. என்னுடன் ஜார்ஜ் என்பவர் இருந்தார். மற்றும் சிலரும்  இருந்தார்கள். எதிரியை தெரியாது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும்
ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 5 (L.W.5) |
| Name | : George |
| Father Name | : Anpurose |
| Village | : Kattathurai |
| Taluk | : Kalkulam |
| Calling | : Mason |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2023

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் காட்டாதுறையில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 27.06.2020 ம் தேதி பகல் 02.00 மணியளவில் சூசையப்பர் ஆலயத்தில் திருட்டு நடைபெற்றது. அது சம்பந்தமாக தக்கலை காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். பார்வைமகஜரில் காண்பிக்கப்படும் இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

நான் சர்ச்சில் பங்கு உறுப்பினர் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் 02.15 மணிக்கு வாங்கியிருப்பார்கள். என்னுடன் ஜோவின் இருந்தார். திருட்டு சம்பவம் பற்றி உங்ளுக்கு நேடியாக தெரியாது என்றால் சரிதான். நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் அங்கு இல்லை

என்றும் சம்பவ இடத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்